# மதநல்லிணக்கம்

இந்திய நாடு மதநல்லிணக்கத்திற்கு உலகிற்கே ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் மதநல்லிணக்கத்தை ஆதரிக்கிறது; ஊக்குவிக்கிறது.

இந்தியா பல மதங்களைக் கொண்ட, பல மொழிகளை கொண்ட, பல இனங்களைக் கொண்ட நாடு என்ற வேற்றுமைகளுக்கு இடையே பல்வேறு கலாச்சாரத்தோடு இருக்கும் மக்களிடையே ஒற்றுமை என்ற மந்திரத்தை ஊக்குவித்து மக்களை ஒற்றுமையுடன் இருக்க வைத்திருக்கிறது.

துரதிர்ஷ்டவசமாக அமைதியை விரும்பும் பாரம்பரிய நாட்டில், சமீபகாலமாக மதப்பிரச்சனைகள் தொல்லைகளை உண்டாக்கிவருகிறது. இந்த தீய சக்திகள் நாட்டில் நிலவி வரும் ஒற்றுமையை உடைக்க கடுமையாக முயற்சித்து வருகின்றனர். மதச்சார்பின்மை மீதான இந்த திட்டமிட்ட தாக்குதல்கள், மத அடிப்படைவாதத்தையும் இன்னபிற பிரிவினைவாத தத்துவங்களையும் தூண்டி விட்டு அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கான முயற்சியேயாகும். இந்திய மக்களை மதரீதியாக பிரிப்பது என்பது உழைக்கும் வர்க்க இயக்கத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். உழைக்கும் வர்க்கத்தின் மீதான் தாக்குதல்களுக்கு எதிராக போராடுவதை விட்டு, இந்த பிரிவினைவாத கொள்கைகள், உழைக்கும் மக்களை மத மற்றும் இதர பிரச்சனைகளுக்காக தங்களுக்குள்ளேயே மோதச் செய்துவிடும்.

மதரீதியாக திரட்டுதல் என்கிற நோக்கத்துடனான பிரச்சாரம் என்ற மோசமான முயற்சிகள் தற்போது தென்படுகிறது. மதச்சார்பற்ற சுதந்திர இந்தியக் குடியரசை சகிப்புத்தன்மையற்ற பாசிச இந்து ராஷ்ட்ரமாக மாற்றுவதே அவர்களின் நோக்கமாகும்.

பாஜக ஆட்சிக்கு வந்த பின்னர் மதவாத சக்திகள் தங்களின் நடவடிக்கைகளை மிகப்பெரிய அளவில் அதிகரித்து வருகின்றனர். உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்களின் படி 2015ஆம் ஆண்டு மத மோதல்கள் 24% உயர்ந்துள்ளதாகவும், அந்த மோதல்களில் காரணமாக உயிரிழப்பு என்பது 65% உயர்ந்துள்ளது. மத துவேஷத்தை பரப்பும் விதத்தில் வன்முறையை தூண்டும் விதமான அறிக்கைகளை அவர்கள் வெளியிடுகிறார்கள். மதவாத சக்திகளால் செய்யப்படும் வெறுப்பூட்டும் பிரச்சாரங்களால் இந்த மதமோதல்கள் அதிகரிக்கின்றன.

நாட்டின் பல பகுதிகளில் மதக்கலவரங்கள் நடைபெறுகின்றன. மக்கள் எதை உண்ண வேண்டும், எதனை கேட்க வேண்டும், எந்த உடையை உடுத்த வேண்டும் என்பதை மத அடிப்படைவாதிகள் முடிவு செய்கின்றனர். நமது நாட்டின் வரலாற்றை மாற்றி எழுதவும் முயற்சிகள் நடக்கின்றன. இந்த மதவாதிகளை எதிர்க்க மறு புறம் சிறுபான்மை மத அடிப்படைவாதிகளும் மத துவேஷத்தை தூண்டிவிடக் கூடிய வகையில் செயல்படுகின்றனர். இவ்வாறு மக்களின் ஒற்றுமை இன்று அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. புதிய தாராளமயக் கொள்கைகளுக்கு எதிராக போராடுவதற்கான தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை இது சீர்குலைக்கிறது. உழைக்கும் வர்க்கம் மற்றும் மக்களின் ஒற்றுமையை பாதுகாக்கும் வகையில் இத்தகையை பிரிவினை வாத சக்திகள் மற்றும் பிரிவினைவாத கருத்துக்களுக்கு எதிரான பணிகளில் ஈடுபடுவது என சென்னையில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 8வது அனைத்திந்திய மாநாடு தீர்மானிக்கிறது.